வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-கிருஷ்ணமூர்த்தி ராமசுப்பிரமணியன்

தேதி 26.7.2026 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

இன்று நாடு முழுவதும் 27-ஆம் ஆண்டு கார்கில் வெற்றி தினம் அனுசரிக்கப்படுகிறது.

பொது மக்கள் தங்கள் பகுதியில் உள்ள குளம், கிணறு, உள்ளிட்ட நீர் நிலைகளைப் பராமரிக்கும் பொறுப்பை தாமாக முன் வந்து ஏற்றுக் கொள்ள வேண்டும் என பிரதமர் திரு நரேந்திர மோடிகேட்டுக் கொண்டுள்ளார்.

புதுச்சேரியில் போதைப் பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டம் கடற்கரை சாலை காந்தி சிலை அருகில் இன்று நடைபெற்றது.

2026 உலக மகளிர் ஜூனியர் ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய வீராங்கனை Anahat singh-தங்கப் பதக்கம் வென்றார்.

கார்கில்

இன்று நாடு முழுவதும் கார்கில் வெற்றி தினம் அனுசரிக்கப்படுகிறது. 1999-ஆம் ஆண்டு கார்கில் போரின் போது தங்கள் உயிரை தியாகம் செய்த இந்திய வீரர்களின் வீரத்தை போற்றும் வகையில் இந்த நாள் ஒவ்வொரு ஆண்டும் ஜூலை 26-ஆம் தேதி அனுசரிக்கப்படுகிறது. பாகிஸ்தானுக்கு எதிராக இந்திய வெற்றியின் 27-ஆவது ஆண்டு நிறைவையும், **ஆபரேஷன் விஜய்** வெற்றிகரமாக நிறைவடைந்ததையும் குறிக்கிறது. இந்த நடவடிக்கையின் போது ஜம்மு-காஷ்மீரின் கார்கில் மாவட்டத்தில் பாகிஸ்தான் ராணுவ வீரர்கள் மற்றும் தீவிரவாதிகளால் ஊடுறுவப்பட்டிருந்த பகுதிகளை இந்திய ஆயுதப் படைகள் மீட்டெடுத்தது நினைவு கூரத் தக்கது.

இதுகுறித்த கூடுதல் தகவல்கள்............

கார்கில் வெற்றி தினத்தை முன்னிட்டு குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திர மோடி, பாதுகாப்பு துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர், மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல்

முருகன் உள்ளிட்டோர் தாய்நாட்டை பாதுகாக்க தங்களது இன்னுயிரை நீத்த வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர்.

கார்கில் வெற்றி தினத்தை முன்னிட்டு குடியரசு தலைவர் வெளியிட்டுள்ள சமூக ஊடகப்பதிவு ஒன்றில் நாடு அவர்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளது என்றும், அவர்களின் வீரகாவியம் எதிர்கால சந்ததியினரை அர்ப்பணிப்புடனும், அசைக்க முடியாத கடமையுணர்வுடனும் நாட்டிற்குச் சேவை செய்ய தொடர்ந்து ஊக்குவிக்கும் என்றும் கூறியுள்ளார்.

வீரர்களின் தியாகம், தேசத்தின் இறையாண்மையை பாதுகாப்பதாகவும், இந்திய ராணுவத்தின் திறமைக்கு சான்றாக விளங்குவதாகவும் குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் குறிப்பிட்டுள்ளார். அவர்களின் வீரம் என்றும் தேசத்தின் பெருமையாக திகழும் என்று கூறிய பிரதமர் திரு நரேந்திர மோடி, இன்று ஆகாஷ்வாணியில் ஒலிபரப்பான 136-ஆவது மன் கி பாத் நிகழ்ச்சியில் உரையாற்றுகையில் தேசத்தின் வீரர்களை நினைவு கூர்ந்தார். இந்த ஆண்டு ஒரு சிறப்பு Shaurya vijay யாத்திரைக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் இம்மாதம் 14-ஆம் தேதி டெல்லியில் உள்ள தேசிய போர் நினைவிடத்தில் இருந்து தொடங்கிய இந்த மோட்டார் சைக்கிள் பேரணி Drass-ல் உள்ள கார்கில் போர் நினைவிடத்தை சென்றடையும் என்று கூறிய திரு மோடி ஒரே பயணம்- ஒரே தேசம்-ஒரே வணக்கம் என்பதை வலியுறுத்தும் வகையில் தொடங்கப்பட்டுள்ள இந்த பயணம் தேசத்திற்காக செய்யப்பட்ட தியாகத்தை ஒருபோதும் மறக்க முடியாது என்பதை நினைவூட்டுவதாகவும் தெரிவித்தார். மேலும் பாதுகாப்பு துறையில் உற்பத்தி, ஏற்றுமதி மற்றும் நட்பு நாடுகள் உடனான ஒத்துழைப்பு என எதுவாக இருந்தாலும் இந்தியா தொடர்ந்து புதிய உயரங்களை எட்டி வருகிறது என்றும் கூறினார்.

*மோடி- மன் கி பாத்*

நாடு தனது தொழில் நுட்பத் திறன்களை தொடர்ந்து வலுப்படுத்தி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தனது மன் கி பாத் உரையில் கூறினார். உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட நவீன போர்க்கப்பலான ஐஎன்எஸ் மகேந்திர கிரி அண்மையில் இந்திய கடற்படையில் இணைக்கப்பட்டதை பிரதமர் சுட்டிக் காட்டினார். இந்த கப்பல் கட்டமைப்பிற்கு தேவையான 75 சதவிகித த்திற்கும் அதிகமான பொருட்கள் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டதாக தெரிவித்த பிரதமர் இந்திய பாதுகாப்பு ஆராய்ச்சி நிறுவனத்தின் தொலைதூர ராக்கெட் பினாகா வெற்றிகரமாக சோதிக்கப்பட்டதை குறிப்பிட்டார். குஷா ஏவுகணை வெற்றிகரமாக சோதிக்கப்பட்டதற்கு விஞ்ஞானிகள் மற்றும் பொறியாளர்களின் விடா முயற்சியை பாராட்டிய அவர் அண்மையில் தாம் மேற்கொண்ட இந்தோனேசிய

பயணத்தின் போது பிரம்மோஸ் மற்றும் அஸ்திரா ஏவுகணைகள் தொடர்பான ஒப்பந்தங்கள் கையெழுத்தானதாகவும் தெரிவித்தார்.

நாட்டின் விண்வெளித் துறையில் தனியார் பங்களிப்பிற்கு வாய்ப்பு அளிக்கப்பட்டதைத் தொடர்ந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை தனியார் நிறுவனத்தின் முதல் ராக்கெட்டான விக்ரம்-1 வெற்றிகரமாக ஏவப்பட்டதை பிரதமர் சுட்டிக்காட்டினார். பொது மக்கள் தங்கள் பகுதியில் உள்ள குளம், கிணறு, உள்ளிட்ட நீர் நிலைகளைப் பராமரிக்கும் பொறுப்பை தாமாக முன் வந்து ஏற்றுக் கொள்ள வேண்டும் என பிரதமர் தனது மனதின் குரல் நிகழ்ச்சியில் கேட்டுக் கொண்டார். ஒவ்வொரு துளி நீரும் சேமிக்கப்பட வேண்டும் என்று கூறிய அவர் மழை நீரை சேகரிப்போம் இயக்கத்தின் கீழ் கடந்த 4-ஆம் தேதி முதல் மழை நீர் சேகரிப்பு, நிலத்தடி நீர் செறிவூட்டல், பழைய நீர் நிலைகளை சீரமைத்தல், மரம் நடுதல், உள்ளிட்ட பல்வேறு பணிகள் நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

<u>பிரதமர் திரு நரேந்திர மோடி மேலும் தமது மனதின் குரல் நிகழ்ச்சியில் பேசுகையில்</u> ................

விளையாட்டு வீரர்களின் சாதனைகள் குறித்தும் பிரதமர் தமது மன் கி பாத் உரையில் குறிப்பிட்டார். ஜப்பான் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்திய வீராங்கனை பி வி சிந்து முதல் முறையாக பட்டம் வென்றதற்கு நாடு பெருமை கொள்வதாக கூறினார்.

இந்திய மகளிர் கிரிக்கெட் அணி லண்டன், லார்ட்ஸ் மைதானத்தில் தனது முதல் டெ ஸ்ட் போட்டியில் வெற்றி பெற்றதற்கு பாராட்டு தெரிவித்த பிரதமர் இதன் மூலம் பெண் சக்தி நாட்டிற்கு பெருமை சேர்த்துள்ளதாக கூறினார். கடந்த 1983-ஆம் ஆண்டு இந்திய தனது முதல் கிரிக்கெட் உலக கோப்பையை கைப்பற்றியதையும் நினைவு கூர்ந்தார். அறிவியல் ஒலிம்பியாட் போட்டிகளில் இந்திய மாணவர்கள் தங்க பதக்கங்களை வென்றது, நாட்டின் இளைஞர் சக்தியை வெளிப்படுத்துவதாக பிரதமர் கூறினார்.

கிளாஸ்கோவில் தொடங்கி உள்ள காமன்வெல்த் விளையாட்டு போட்டிகளில் இந்திய வீரர்கள் தங்களது திறமைகளை வெளிப்படுத்த வேண்டுமென்று நாட்டு மக்கள் ஒவ்வொருவரும் விரும்புவதாக தெரிவித்த திரு மோடி, தொடர்ந்து நாட்டு மக்கள் விளையாட்டு வீரர்களுக்கு தங்களது வாழ்த்துக்களை தெரிவித்து வருவதாகவும் கூறினார்.

*கார்கில்-புதுச்சேரி*

புதுச்சேரியில் இன்று அரசு சார்பில் நடைபெற்ற கார்கில் வெற்றி தின விழாவில் துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு ரங்கசாமி, உள்ளிட்டோர் கலந்து கொண்டு கடற்கரை சாலையில் அமைந்துள்ள கார்கில் நினைவு சின்னத்தில் மலர் அஞ்சலி செலுத்தினர். இந்நிகழ்ச்சியில் சட்டப்பேரவை தற்காலிக தலைவர் திரு அன்பழகன், அமைச்சர்கள் திரு ராஜவேலு, திரு சிவக்கொழுந்து, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு ஏகேடி ஆறுமுகம், திரு அழகானந்தம், தலைமைச் செயலர் திரு சரத் சவ்கான், காவல்துறை அதிகாரிகள், ராணுவ அதிகாரிகள் மற்றும் முன்னாள் ராணுவத்தினர் உள்ளிட்டோரும் அஞ்சலி செலுத்தினர்.

*புதுச்சேரி-விழிப்புணர்வு நிகழ்ச்சி*

புதுச்சேரி வாஸ்கோ அமைப்பு சார்பில் போதைப் பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி கடற்கரை சாலை காந்தி சிலை அருகில் இன்று நடைபெற்றது. நிகழ்ச்சியில் இளைஞர்கள், முதியோர்கள் உட்பட பலரும் கலந்து கொண்ட விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டமும் நடைபெற்றது. துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் மாரத்தான் ஓட்டத்தை தொடக்கி வைத்ததுடன் போதைப் பொருள் ஒழிப்பு கையெழுத்து இயக்கத்தையும் தொடக்கி வைத்தார். அப்போது பேசிய அவர் உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ள அனைவரும் உடற்பயிற்சி செய்வது அவசியம் என்றும் வலியுறுத்தினார். நிகழ்ச்சியில் அமைச்சர் திரு ராஜவேலுவும் கலந்து கொண்டார்.

*ஜிப்மர்*

புதுச்சேரி வில்லியனூர் கோட்டைமேடு பகுதியைச் சேர்ந்த 33 வயது விஜயலட்சுமி சாலை விபத்து காரணமாக மூளைச்சாவு அடைந்ததைத் தொடர்ந்து அவரது கருவிழிகள், சிறுநீரகங்கள் மற்றும் திசுக்கள் தானமாக வழங்கப்பட்டன. இந்த மனிதநேய செயலால் 4 நோயாளிகளுக்கு மறுவாழ்வு கிடைத்துள்ளதாக ஜிப்மர் நிர்வாகம் தெரிவித்துள்ளது. மேலும் உறுப்பு தானம் குறித்த விழிப்புணர்வு பொது மக்களிடையே அதிகரிக்க வேண்டும் என்றும் ஜிப்மர் வேண்டுகோள் விடுத்துள்ளது.

*ஏனாம்*

ஏனாமில் Dariyalatippa கிராமத்திற்கு அருகில் உள்ள தீவு ஒன்றில் அமைந்துள்ள சதுப்பு நிலக் காட்டில் ஏனாம் வனத்துறை சார்பில் உலக சதுப்பு நில தினம் இன்று கொண்டாடப்பட்டது. இதனை முன்னிட்டு கவுதமி கோதாவரி ஆற்றங்கரையில் சதுப்பு நில மரக் கன்றுகள் நடப்பட்டன. நிகழ்ச்சியில் வன அதிகாரி திரு Chikkala Jogiraju, ஓய்வு பெற்ற உதவி

இயக்குநர் திரு சி கே வேணுகோபால், தவ்லேஸ்வரம் நீர்பாசனத் துறை உதவி இயக்குநர் திரு முஜிபுர் ரஹ்மான் ஆகியோர் கலந்து கொண்டனர். சுற்றுச் சூழல் மற்றும் மீன்வளர்ப்பில் முக்கிய பங்கு வகிக்கும் சதுப்பு நில மரங்களை பாதுகாக்குமாறு அப்போது அவர்கள் பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

*மாகே*

மாகே விடுதலை இயக்கத்தின் முக்கிய தலைவரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான ஐ கே குமாரன் மாஸ்டரின் 27-ஆவது நினைவு தினம் இன்று அனுசரிக்கப்பட்டது. அவரது நினைவு தினத்தை முன்னிட்டு மாகேயில் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தன. தேசத் தந்தை மகாத்மாகாந்தியின் முழு உருவச் சிலை, சி இ பரதன் மற்றும் ஐ கே குமாரன் மாஸ்டரின் உருவச் சிலைகளுக்கும் மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. பின்னர் அவரது இல்லத்தில் அமைந்துள்ள நினைவிடத்தில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்ச்சியில் அன்னாரது குடும்பத்தினர் பங்கேற்றனர்.

*பாண்டிச்சேரி-கிரிக்கெட்*

கடந்த 7-ஆம் தேதி முதல் சீகம் மைதானத்தில் நடைபெற்று வரும் புதுச்சேரி பிரிமியர் லீக் கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டத்தில் இன்று வில்லியனூர் மோஹித் கிங்ஸ் மற்றும் மாகே ஸ்ட்ரைக்கர்ஸ் அணிகள் மோதுகின்றன. புதுச்சேரி பிரிமியர் லீக் தொடரில் இதுவரை நடைபெற்ற 3 சீசன்களின் இறுதிப் போட்டிகளிலும் இவ்விரு அணிகளுமே மோதி உள்ளதும், இத்தொடரில் பங்கு பெற்ற 11 ஆட்டங்களிலும் மோஹித் கிங் அணி வெற்றி பெற்றதும் குறிப்பிடத் தக்கது.

*ஜோஷி*

மத்திய நுகர்வோர் விவகாரங்கள், உணவு மற்றும் பொது விநியோகம் மற்றும் புதிய மற்றும் புதுப்பிக்கதக்க எரிசக்தி துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி இன்று மத்திய கல்வி அமைச்சராகவும் கூடுதலாக பொறுப்பேற்றுக் கொண்டார். பின்னர் கல்வித் துறையில் பல்வேறு திட்டங்கள் மற்றும் முன்னெடுப்புகள் குறித்து ஆய்வு செய்யும் வகையில் கூட்டம் ஒன்றை நடத்தினார். இக்கூட்டத்தில் கல்வித் துறை இணை அமைச்சர் திரு ஜெயந்த் சவுத்ரி மற்றும் பல மூத்த அமைச்சக அதிகாரிகள் கலந்து கொண்டனர். கூட்டத்திற்கு பின் செய்தியாளர்களைச் சந்தித்த திரு ஜோஷி இந்த பொறுப்பை தன்னிடம் ஒப்படைத்ததற்காக பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் இத்துறை குறித்து முழுமையாக புரிந்து கொள்ளவே ஆய்வுக் கூட்டம் நடைபெற்றதாகவும் கூறினார். மேலும்

இத்துறையின் செயல்பாடுகளை முழுமையாக புரிந்து கொள்வதே தமது உடனடி முன்னுரிமை என்றும் தெரிவித்தார்.

ஸ்குவாஷ்

2026 உலக மகளிர் ஜூனியர் ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற இந்திய வீராங்கனை Anahat singh-கிற்கு பிரதமர் திரு நரேந்திர மோடி, மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா, திரு சர்பானந்த சோனோவால், திரு ஹர்தீப்சிங் புரி உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர். இது ஒரு வரலாற்று சாதனை என்றும் இந்த சாதனை இளைஞர்களிடையே ஸ்குவாஷ் விளையாட்டை மேலும் பிரபலப்படுத்தும் என்றும் பிரதமர் தமது வாழ்த்துச் செய்தியில் கூறி உள்ளார். இந்த வரலாற்று சிறப்பு மிக்க வெற்றி நாட்டு மக்களுக்கு பெருமை சேர்ப்பதாக டாக்டர் மன்சுக் மாண்டவியா தமது வாழ்த்துச் செய்தியில் கூறி உள்ளார்.

Glasgow-வில் நடைபெற்று வரும் காமன்வெல்த் விளையாட்டு போட்டிகளில் இந்தியாவின் ரிஷிகாந்தா சிங் ஆடவர் 60 கிலோ எடை பிரிவு பளுதூக்கும் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றார். இவர் 121 கிலோ எடையைத் தூக்கி காமன்வெல்த் விளையாட்டு போட்டியில் புதிய சாதனை நிகழ்த்தி உள்ளார்.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

இன்று நாடு முழுவதும் 27-ஆம் ஆண்டு கார்கில் வெற்றி தினம் அனுசரிக்கப்படுகிறது.

பொது மக்கள் தங்கள் பகுதியில் உள்ள குளம், கிணறு, உள்ளிட்ட நீர் நிலைகளைப் பராமரிக்கும் பொறுப்பை தாமாக முன் வந்து ஏற்றுக் கொள்ள வேண்டும் என பிரதமர் திரு நரேந்திர மோடி கேட்டுக் கொண்டுள்ளார்.

புதுச்சேரியில் போதைப் பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு மாரத்தான் ஓட்டம் கடற்கரை சாலை காந்தி சிலை அருகில் இன்று நடைபெற்றது.

2026 உலக மகளிர் ஜூனியர் ஸ்குவாஷ் சாம்பியன்ஷிப் போட்டியில் இந்திய வீராங்கனை Anahat singh-தங்கப் பதக்கம் வென்றார்.

----------------------------